[1993 ஏப்ரல் 6

257—

ஆலந்தூர் தொகுதியில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத் திட்டங்களை விரிவுபடுத்தல்.

*10192—திரு. எஸ். அண்ணாமலை:

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆலந்தூர் தொகுதி, பரங்கிமலை கன்டோன்மென்ட் பகுதியில் வசிக்கும் குடிசைவாழ் மக்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் திட்டங்களை விரிவுபடுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எஸ். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ''இல்லை'' என்று பதில் சொன்னார்கள். ஆலந்தூர் தொகுதி பரங்கிமலை கன்டோன்மென்டில் வசிக்கும் குடிசைவாழ் மக்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் திட்டங்களை விரிவுபடுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலந்தூர் தொகுதி பரங்கிமலை கன்டோன்மென்ட் பகுதியிலுள்ள குடிசைப்பகுதிகள் அமைந்துள்ள நிலம் இராணுவத் துறைக்குச் சொந்தமானது. இராணுவத்துறை அந்நிலத்தை குடிசை மாற்று வாரியத்திற்கு மாற்றித்தரும் பட்சத்தில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் தன நிதி நிலையைப் பொறுத்து திட்டங்களை அமல்படுத்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரங்கிமலை கன்டோன்மென்ட் பகுதியில் இருக்கின்ற மக்கள் தேர்தல் வருகின்ற பொழுது தமிழக அரசுக்கு ஓட்டு அளிக்கிறார்கள். ஆனால், அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு நாம் எந்தவொரு அடிப்படை வசதியையும் செய்துதர முடியவில்லை. அப்படியிருக்கின்ற

1993 ஏப்ரல் 6]

போது, அந்தப் பகுதியில் குடிசைவாழ் மக்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், மத்திய அரசையோ, இராணுவத்தையோ தமிழக அரசு அணுகி, அந்த இடத்தை வாங்கி குடிசைவாழ் மக்களுக்கு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் வீடு கட்டித்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.10

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வி, குடிசைமாற்று வாரியத்தின் மூலமாக் திட்டத்தினை விரிவு படுத்த முடியுமா என்றுதான். அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்யப்படவில்லையென்று சொல்கின்றார்கள். உள்ளாட்சித்துறையின் வாயிலாக பல்வேறு அடிப்படை வசதிகள் பரங்கிமலை கன்டோன்மென்ட்பகுதிகளுக்கு சிறப்பாக, இந்த அரசு பதவியேற்றதற்குப் பிறகு செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. தற்போது இருக்கிற பிரச்சினை குடிசை மாற்று வாரியத்தின் வாயிலாக குடிசைப் பகுதிகளை மாற்றி அமைக்கின்ற திட்டம் இருக்கிறதா என்பதுதான். இதைப் பொறுத்தவரை, அந்த நிலத்தைப் பெற வேண்டும். பாதுகாப்புத் துறையின் கையிலே இந்த நிலம் இருக்கின்ற காரணத்தினால் இராணுவத்துறை இந்த நிலத்தை வாரியத்திற்கு மாற்றித் தருகிற பட்சத்தில் இப்படிப்பட்ட திட்டங்கள் மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இது பற்றி பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 258, திரு. சி. சுவாமிநாதன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

258—

வெட்டன்விடுதி ஆதிதிராவிட மாணவர் விடுதியில் கூடுதல் மாணவர்களைச் சேர்த்தல்.

*11185—சி. சுவாமிநாதன்:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, வெட்டன்விடுதி ஆதிதிராவிட மாணவர் விடுதிக்கு கூடுதலாக மாணவர்களைச் சேர்க்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?